**செ. கு. எண்: 82** **நாள்: 21.03.2013**

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 21.3.2013

சென்னை, பாரிமுனை, அரண்மனைக்காரன் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு கச்சாலீஸ்வரர் திருக்கோயிலில் 15.3.2013 அன்று திருக்குளத்தை தூர் வாரும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்த போது, அருகில் இருந்த மரம் விழுந்தால், சுற்றுச் சுவர் சரிந்து விழுந்ததில், சாலிகிராமத்தைச் சேர்ந்த திரு. மாரியப்பன் என்பவரின் மகன் மதியழகன் மற்றும் வளசரவாக்கத்தைச் சேர்ந்த திரு. ரகுபதி என்பவரின் மகன் ராஜா ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சம்பவத்தில் அகால மரணமைடந்த மதியழகன் மற்றும் ராஜா ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் சாலிகிராமத்தைச் சேர்ந்த திரு. அம்பிகாபதி என்பவரின் மகன் திரு. குமார் மற்றும் திரு. கோபால் என்பவரின் மகன் திரு. நடராஜ் ஆகிய இருவரும் பலத்த காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் இருவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மதியழகன் மற்றும் ராஜா ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்த திரு. குமார் மற்றும் திரு. நடராஜ் ஆகியோருக்கு தலா 25,000 ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்த ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**